## மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.

முன்னிலை **திரு.பா.சரவணன், பி.எஸ்.சி., பி.எல்.,**
மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

2026 ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 4 ஆம் நாள் சனிக்கிழமை

## இடைநிலை மனு எண்.14/2026 ல்
## அசல் வழக்கு எண்.292/2020

பரிமளா,
த/பெ ராஜா,
எண்.18, லெட்சுமி
நாரயாணன் நகர்,
ஸ்ரீரங்கம்–மேலூார் ரோடு,
ஸ்ரீரங்கம்,
திருச்சிராப்பள்ளி. ... மனுதாரர் / வாதி

/எதிர் /

1. திருவேங்கடம் மற்றும் 16 நபர்கள் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது, கடந்த 30.06.2026 அன்று என் முன்பாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. K.S.சங்கர்முரளி அவர்களும், 1,2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.பிரபாகர் அவர்கள் முன்னிலையாகி இந்த மனுவிற்கு ஆட்சேபனை இல்லையென்று தெரிவித்தும், 4 முதல் 17 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. E.சொக்கலிங்கம் அவர்கள் முன்னிலையாகி எதிருரை தாக்கல் செய்தும், 3ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் அசல் வழக்கில் தோன்றாதரப்பினராக்கப்பட்டும், மனுவை நடத்த மனு, எதிருரை மற்றும்

வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாத பிரதிவாதங்களை கேட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்

**உத்தரவு**

1) மனுதாரர்/வாதி தரப்பில், இந்த மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு, மனுதாரர்/வாதி தரப்பு மனுவை ஏற்றுக் கொண்டு, அசல் வழக்கை மறுதிறவு (Re-Open) செய்ய அனுமதிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) மனுதாரர்/ வாதி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், அசல் வழக்கானது வாதியால், பிரதிவாதிக்களுக்கெதிராக, பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அசல் வழக்கில், 19.06.2026 அன்று, 1,2 பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்திற்காக ஒத்திவைக்கப்பட்டிருந்தது என்றும், பின்னர், 09.06.2026 அன்று, வா.சா.1 குறுக்கு விசாரணை செய்யப்பட்டு, வாதி தரப்பில் சாட்சியமில்லையென வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது. அதன்பின்னர், வாதி தரப்பில் சில புதிய சாட்சிகள் எதிர்பாராதவிதமாக இந்த வழக்கிற்கு வந்துள்ளனர் என்றும், வாதியின் வழக்கினை நிரூபணம் செய்ய, இவர்களது சாட்சியம் மிகவும் அத்தியாவசியமானது என்றும், இந்த மனு அனுமதிக்கப்படாவிட்டால், மனுதாரருக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பு ஏற்படும் என்றும், இந்த மனுவை

அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது என்றும், எனவே, இந்த இம்மனுவை அனுமதிக்க வேண்டும் என்று வாதிட்டார்.

3) 4 முதல் 17 வரையிலான எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், இந்த மனுவில் இரண்டாவது முறையாக வழக்கினை மறுதிறவு செய்யக் கோரி குறிப்பிட்டுள்ள காரணங்கள் அனைத்தும் முற்றிலும் பொய்யானவை என்றும், ஏற்கனவே, வாதிக்கு போதுமான வாய்ப்புகளை வழங்கியும், அவரது முந்தைய மறுதிறவு மனுவையும் அனுமதித்துள்ளது என்றும், மீண்டும், இம்மனுவை அனுமதிக்கும்பட்சத்தில், அது எதிர்மனுதாரர்களுக்குப் பெருமளவில் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும், மேலும், வழக்கினை இழுத்தடிக்கும் உள்நோக்கத்தோடு மட்டுமே மனுதாரரால் இந்த இரண்டாவது மறுதிறவு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே, இந்த மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

4) இந்த மனுவில் பரிசீலிக்கப்பட வேண்டியது என்னவென்றால் இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதாகும்.

5) இருதரப்பு கருத்துகளும், வழக்காவணங்களும் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. வாதி தரப்பில் அசல் வழக்கானது எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கெதிராக பாகபிரிவினை பரிகாரம் கோரி தாக்கல்

செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் ஏற்கனவே வாதி தரப்பு சாட்சியம் 09.06.2026 அன்று முடிக்கப்பட்டு, 1,2 பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்திற்காக வாய்தா போடப்பட்டிருந்த நிலையில் வாதி தரப்பில் கூடுதல் சாட்சியம் முன்னிட வாய்ப்பு வழங்கக் கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) மனுதாரர்/ வாதி தரப்பில் தங்களது தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்ட பின்னர், வாதி தரப்பில் சில புதிய சாட்சிகள் எதிர்பாராதவிதமாக இந்த வழக்கிற்கு வந்துள்ளனர் என்றும், வாதியின் வழக்கினை நிரூபணம் செய்ய, அவர்களது சாட்சியம் வழக்கை நிரூபிக்க மிக முக்கியமான சாட்சியம் என்றும் கூறப்பட்டுள்ளது. இந்த மனுவுக்கு 1,2 பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபனை இல்லையென்று தெரிவித்துள்ளனர். ஆனால் 4 முதல் 17 பிரதிவாதிகள் தரப்பில், இந்த மனுவை செலவுத்தொகையுடன் அனுமதிக்குமாறு வாதிடப்பட்டது.

7) விசாரணை நீதிமன்றத்தில், வழக்கின் தரப்பினர்கள் அவர்களது வழக்கை நிரூபிக்க உரிய வாய்ப்பு வழங்குவது, நீதியின் நலன் கருதி அவசியமாகிறது. மனுதாரர்/வாதி கோரியுள்ளதுபோல், அவரது தரப்பை நிரூபணம் செய்ய, அசல் வழக்கை மறுதிறவு (Re open) செய்ய, ஒரு வாய்ப்பு வழங்குவதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும். எனினும், இந்த மனுவை 4 முதல் 17 பிரதிவாதிகள் தரப்பிற்கு ஒரு நியாயமான செலவுத்தொகை செலுத்த உத்தரவிட்டு பின்வருமாறு இம்மனுவை அனுமதிக்கலாம் என்று முடிவு செய்யப்படுகிறது.

8) **முடிவாக,**

இந்த மனு பின்வருமாறு அனுமதிக்கப்படுகிறது,

1) மனுதாரர்/ வாதி இந்த மனுவின் செலவு தொகையாக **ரூ.1000/–** (ரூபாய் ஆயிரம் மட்டும்) 4 முதல் 17 எதிர்மனுதாரர்கள்/4 முதல் 17 பிரதிவாதிகள் தரப்புக்கு **10.07.2026** க்குள் செலுத்தும்பட்சத்தில் இந்த மனு அனுமதிக்கப்படும் என்றும், தவறும்பட்சத்தில் இந்த மனு தானாக தள்ளுபடியாகும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

2) மீண்டும் அழைக்க வாய்தா 10.07.2026. அவ்வாறு செலவுத்தொகை செலுத்தி மனு அனுமதிக்கப்படும் நிலையில் கூடுதல் சாட்சிகளை மனுதாரர்/வாதி விரைந்து அழைத்து வந்து அவரது தரப்பில் முதல் விசாரணை செய்து முடிக்கப்பட வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு, என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்தபின், என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 4 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

SARAVANAN B
Digitally signed by SARAVANAN B
Date: 2026.07.04 14:03:38 +0530

**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**திருச்சிராப்பள்ளி.**

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் : இல்லை.

SARAVANAN B
Digitally signed by SARAVANAN B
Date: 2026.07.04 14:03:45 +0530

**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**திருச்சிராப்பள்ளி.**